# <u>இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை</u>
**(19.11.2007)**

**இன்று இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்ட தொடக்க விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமிதம் கொள்கின்றேன்.**

**நாம் கூடியிருக்கின்ற இந்த "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்ற பெயர் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக பல்வேறு விதமாக பலர் பாடுபட்டிருந்தாலுங்கூட உணர்ச்சிமிக்க கவிதைகளின் மூலமாக தன்னுடைய பங்களிப்பைச் செய்த ஒரு பெரும் பாவலருடைய பெயர் 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்பதாகும்.**

**இங்கே நாம் கூடியிருப்பது பெற்ற சுதந்திரத்தை பேணிக் காத்திட உற்ற வழிகள் எவை எவை என்பதையெல்லாம் சிந்தித்து அதன்படி செயல் படுவதற்காக நம்மைத் தயார்படுத்திக்கொள்ள இந்த நிகழ்ச்சியிலே நாம் கூடியிருக்கின்றோம்.**

**முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் என்பது, பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல், ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும். 1962ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் வாழ்கின்ற முதியோர்களுக்கு மாதம் 20 ரூபாய் உதவித் தொகை வழங்குவது என்று அறிவிக்கப்பட்டு அது நடைமுறையிலே இருந்தது. அப்போது இந்தத் திட்டத்திற்கு இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் என்ற பெயர் இல்லை என்றாலுங்கூட இதனுடைய குறிக்கோளாக முதியோர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது என்பது**

இருந்தது. 20 ரூபாய்தானா என்று அலட்சியப் படுத்த முடியாது. 20 ரூபாய் வழங்கிய அந்தக் காலகட்டத்தில் பணத்தின் மதிப்பு – இன்றைய தினம் அந்த 20 ரூபாயை மாற்றி பல மடங்கு அதிகமாகத் தருகிற இந்த காலகட்டத்திலுள்ள பண மதிப்பு – இவைகளையெல்லாம் நாம் அறியாதவர்கள் அல்ல.

1957ல், நானும் நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் சட்டசபைக்கு வந்தபோது, நிதிநிலை அறிக்கையை அன்றைய நிதியமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள் படித்த போது, "100 கோடி ரூபாய் பட்ஜெட் – சதமடிக்கக் போகிறேன்" என்று பெருமையாகச் சொன்னார். 100 கோடி ரூபாய் என்பது அந்தக் காலத்திலே – அந்த பட்ஜெட்டுக்கு அவ்வளவு பெரிய மதிப்பாக இருந்தது. இன்றைக்கு – 40 ஆயிரம் கோடி ரூபாய் – 50 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவிற்கு நம் மாநில பட்ஜெட்டினுடைய நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது 1962ல் 20 ரூபாய் முதியோர்களுக்கு மாத ஊதியம் கொடுத்ததை நாம் சாதாரணமாகக் கருத முடியாது. அன்றுள்ள நிலையில் அது முதியோர்களுக்காகத் தரப்பட்ட உரிய நிதி என்றுதான் நாம் கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு அந்தத் தொகை உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு ஆட்சியிலும் அந்தத் தொகை உயர்ந்து உயர்ந்து கடந்த ஆண்டு நாங்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது 200 ரூபாய் முதியோர்களுக்கு கொடுப்பது என்று வழங்கப்பட்டு வந்தது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் தொகை தங்களுக்குப் போதுமானதாக இல்லை என்ற முறையீடு முதியோர்களிடமிருந்து – அந்த அமைப்புகளிடமிருந்து வந்த காரணத்தால் அதை 400 ரூபாயாக ஆக்கி இந்த ஓராண்டு காலமாக முதியோர்களுக்கு ஓய்வூதியத் தொகை 400 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த 400 ரூபாயில் 200 ரூபாய் இந்திரா காந்தி

முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின் சார்பாக மத்திய அரசால் வழங்கப்பட்டு, மீதமுள்ள 200 ரூபாயை மாநில அரசே முதியோர்களுக்காக வழங்குகின்ற ஒரு நிலை இன்றைக்கு உருவாகி இருக்கின்றது.

இந்த 400 ரூபாய் அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளில் அவர்களுடைய தேவைக்கேற்ப விரிவடையவும் கூடும். ஆனால், இது 200 ரூபாயாக இருந்து 400 ரூபாயாக ஆகியிருக்கின்றது என்ற செய்தியை மாத்திரம் உங்களுக்கு இப்போது தர விரும்புகின்றேன். நாம் தருகின்ற இந்த ரூபாயை மத்திய அரசு சிந்தித்துப் பார்த்து இந்த முதியோர் ஓய்வூதிய நிதியாக அவர்கள் வழங்குகின்ற நிதியிலே ஒட்டுமொத்த 400 ரூபாயையும் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அப்போதுதான் வீட்டிலே வேலையற்று, வேலையைப் பார்க்க வாய்ப்பற்று, உதவியற்று இருக்கின்ற முதியோர்களுக்கு தக்க நிவாரணமாக அது அமைய முடியும் என்பதால் இந்த நாளில் அன்னை இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளைப் போற்றுகின்ற இந்த நல்ல நாளில் அவர்களுடைய பெயரால் நடைபெறுகின்ற இந்த ஓய்வூதிய தேசியத் திட்டத் தொடக்கத்தில் இந்த முறையீட்டை நான் மத்திய அரசுக்கு வைக்க விரும்புகின்றேன். நாம் தருகின்ற 400 ரூபாயில் 200 ரூபாய் நம்முடைய பணமும் 200 ரூபாய் மத்திய சர்க்கார் பணமும் இருக்கின்றது. அந்த மொத்தம் 400 ரூபாயையும் மத்திய அரசே தருகின்ற வகையில் இருந்தால் இன்னும் நலமாக இருக்கும். நம்முடைய பொருளாதார வசதிக்கும் அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக் காட்டி, தமிழ்நாட்டிலே நாம் நிறைவேற்றுகின்ற பல நல்ல திட்டங்களை எல்லாம் மத்திய அரசு ஆதரித்து, வரவேற்று, பாராட்டி அவர்களே இந்தத் திட்டங்களைக் கையிலே எடுத்துக் கொண்டு இன்றைக்கு மக்களுக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டிலே 1962ஆம்

ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தை இப்போது 400 ரூபாய் அளவிற்கு நாம் உயர்த்தியிருக்கின்றோம். இதற்கு வழிவகுத்த நம்முடைய இந்தியப் பேரரசுக்கு இந்த நாளில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்து இந்திரா காந்தி அவர்களுடைய பிறந்த நாளைப் போற்றுகின்ற நாளில் அவர்கள் விரும்பிய இந்தியாவை நிர்மாணிப்போம் என்ற உறுதியோடு விடைபெற்றுக் கொள்கிறேன்.